தமிழ்ச் சொற்களைப்

பிழை நீக்கி எழுது முறை

உள்ளுறை

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த

:: நூற்பதிப்புக் கழகம், லிமிடெட் ::

திருநெல்வேலி & சென்னை

பதிவு செய்யப்பட்டது] [விலை அணா 3

வெளியீடு - சு.

ஓம்

தமிழ்ச் சொற்களைப்

பிழை நீக்கி எழுதுமுறை

உள்ளுறை

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை.

அக்டோபர் 1938

முன்னுரை

"தமிழ்ச் சொற்களைப் பிழை நீக்கி எழுதுமுறை" என்ற இந்நூல் பொதுவாகத் தமிழ்மக்களனைவருக்கும், சிறப்பாகத் தமிழ் மாணவர் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாது வேண்டப்படும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் இலக்கணம் விரிவுற்று இருக்கின்றமையாலும், தமிழ்மக்கட்குப் பிறமொழிக் கல்வியில் கருத்து மிக்கிருத்தலாலும் அவர்கள் தமிழ் இலக்கணத்தைக் கற்பதே இல்லை; கற்பினும் கருத்தூன்றிக் கற்பதில்லை. எனவே தமிழ்மக்கள் ஒருவர்க்கொருவர் எழுதுங் கடிதங்களிலும், மாணவர் எழுதுங் கட்டுரைகளிலும் பிழை மலிந்து காணப்பெறுகின்றது.

தமிழர் சடங்குகளின் அழைப்பிதழ்களிற் பிழைகள்; நாடகம், பல்வகை விழாக்கள் முதலியவற்றின் அறிக்கைகளிற் பிழைகள்; அறிக்கைப் பலகைகளிற் பிழைகள்; அந்தோ! எங்கே பார்த்தாலும் தமிழ்ச் சொற்களிற் பிழைகளே மலிந்து காணப்பெறுகின்றன. ஆங்கிலச் சொற்களில் இவ்வளவிற்குப் பிழைகள் காணப்படா. எனவே, தமிழ்ச்சொற்களைப் பிழை நீக்கி எழுதுவதற்குத் துணை புரியத்தக்க முறையில் இந்நூலின்கண் பல்வகைத் தலைப்புக்கள் கொண்ட சொற்களும் சொற்றொடர்களும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. அவற்றின் உதவிகொண்டு பெரும்பாலான பிழைகளை நீக்கி எழுதுதல் எளிதாகும்.

மிகவும் எளிய விலைக்குக் கிடைக்கப்பெறும் இந்நூற்படிகளைப பள்ளிக்கூட ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை வாங்குமாறு தூண்டியும், தமிழ்ச் செல்வர்கள் நூற்றுக்கணக்காக வாங்கித் தமிழ்மக்கட்கு விலையின்றி வழங்கியும் எம்மை ஊக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தார்.

ஓம் சிவம்

தமிழ்ச் சொற்களைப் பிழை நீக்கி எழுதுமுறை

1. பிழைபட எழுதுஞ் சொற்களும் திருத்தங்களும்

பிழை	திருத்தம்
அக்கிள்	அக்குள்
அகாறணம்	அகாரணம்
அச்சாரம்	அச்சகாரம்
அடப்பம்	அடைப்பம்
அடமழை	அடைமழை
அடமாணம்	அடைமாணம்
அண்ணைக்கயறு	அரைஞாண் கயிறு
அதாவது	அஃதாவது
அதிர்சம்	அதிரசம்
அதிஷ்டம்	அதிருஷ்டம்
அதுகள்	அவைகள்
அப்பங் போனங்	அப்பன் போனன்
(சொல்லீற்றில் 'ங்' வராது)	
அமக்களம்	அமர்க்களம், (போர்க்களம்)
அய்யா, அய்யர்	ஐயா, ஐயர்
அருகாமணை, அருவாமணை	அரிவாள் மணை
அருகாமை	அருகு, (அதனருகே)
அருமந்த	அருமருந்தன்ன
அலமேலு	அலர்மேல் (மங்கை)
அழுகணி	அழுகுணி
அழும்பு	அழிம்பு
அவங்க, அவன்கள்	அவர்கள்
அவைகள்	அவை
(அவை என்பதே பண்மை)	
அவைகளை	அவற்றை
அறுதலி	அறுதாலி
அனியாயம்	அநியாயம்
வினாயகன்	விநாயகன்
(வடசொற்களில் றன்னகரம் ஒருபோதும் வராது.)	
ஆத்துக்கு	அகத்துக்கு
ஆம்படையாள்	அகமுடையாள்
ஆயிதம்	ஆயுதம் (கருவி)
ஆவாரம்பூ	ஆவிரம்பூ
ஆக்ஷி	ஆட்சி
(ஆள் பகுதி)	
இகழ்ட்சி	இகழ்ச்சி
இடசன்	இடைச்சன்
இடது	இடம் (இடம் + கை = இடக்கை)
இடைபோடு	எடைபோடு, (நிறை போடு)
இத்துப்போதல்	இற்றுப்போதல்

பிழை	திருத்தம்
இமையமலை	இமயமலை
இரண்டாந்திரம்	இரண்டாந்தரம்
இரும்பல்	இருமல் (இருமு பகுதி)
இலும்பு	எலும்பு
ஈரட்டு, ஈரெட்டு	ஈரொட்டு
ஈர்வளி	ஈர்வலி
உசிர்	உயிர்
உடமை	உடைமை
உடம்படிக்கை	உடன்படிக்கை
உண்ணமலை	உண்ணாமுலை
உத்தராயனம்	உத்தராயணம்
உத்தளவு	உற்றளவு
உத்திரவு	உத்தரவு
உமிநீர்	உமிழ்நீர்
ஊரணி	ஊருணி, ஊருண்ணி
உலந்து	உலர்ந்து, (காய்ந்து)
ஊர்சுத்து	உகிர்சுற்று
எகனைமொகனை	எதுகைமோனை
எச்சகலை	எச்சிற்கலை
எடக்கு	இடக்கு
எடஞ்சல்	இடைஞ்சல்
எடறு	இடறு
எண்ணை	எண்ணெய், (எள் + நெய்)
எலிமிச்சம்பழம்	எலுமிச்சம்பழம்
எழவு	இழவு
எழுகு	எஃகு
எளக்காரம்	இளக்காரம்
என்னமோ	என்னவோ
எழரைநாட்டுச் சனி	எழரையாட்டைச்சனி

பிழை	திருத்தம்
ஒட்ரை	ஒட்டடை, ஒட்டறை
ஒண்டியாய்	ஒன்றியாய்
ஒத்தடம்	ஒற்றடம்
ஒத்தெரெட்டை	ஒற்றை இரட்டை
ஒருக்கால்	ஒருகால்
ஒருவள்	ஒருத்தி (ஒருவனுக்குப் பெண்பாற் பெயர்)
ஒன்ரு	ஒன்று
அன்ரி	அன்றி (னகரத்தைத் தொடர்ந்து ரகரம் ஒருபோதும் வராது)
கடகால்	கடைக்கால்
கடப்பாறை	கடப்பாரை
கிடாரங்காய்	கடாரங்காய், கடாநாரத்தங்காய்
கடுசு	கடிசு
கடுவு	கடுகு
கடைசன்	கடைச்சன்
கட்டிடம்	கட்டடம், (கட்டு + அடம்)
கட்லு	கட்டில்
கண்ட்ராவி	கண்ணராவி
கண்ணாலம்	கலியாணம்
கத்திரிக்கோல்	கத்தரிக்கோல்
கத்திரிக்காய்	கத்தரிக்காய்
கந்தட்டி	கண்திருஷ்டி
கம்பிளி	கம்பளி
கம்மனாட்டி	கைம்பெண்டாட்டி
கருவப்பிலை	கறிவேப்பிலை

பிழை	திருத்தம்
கருப்பட்டி	கருப்புக்கட்டி, (பனவெல்லம்)
கவுளி	கவளி (வெற்றிலைக் கட்டு)
களப்பு	களைப்பு, கிளப்பு
கறடுமுறடு	கரடுமுருடு
கறுமை	கருமை, கரிய நிறம்
கஸ்டம்	கஷ்டம்
(துஸ்டன்)	துஷ்டன் (டகரத்துக்குமுன் ஷ் வரும்; ஸ் வராது)
காக்கா	காக்கை
காணும்	காணேன், காணேம்
காதுக்குடும்பி	காதுக்குறும்பி
கார்க்கும்	காக்கும்
கார்ப்பான்	காப்பான் (கா பகுதி)
காவரியாறு	காவிரியாறு
காக்ஷி	காட்சி (காண் பகுதி)
கிடா	கடா, (ஆட்டுக் கடா)
கிராணம்	கிரகணம்
கினவு	கனா, கனவு
கீத்துப்பறை	கீற்றுப்பிறை
குஞ்சி	குஞ்சு
குதுவை	கொதுவை
குடக்கூலி	குடிக்கூலி
குடுத்து	கொடுத்து (கொடு பகுதி)
குதவளை	குரல்வளை
குத்துயிர்	குற்றுயிர்
குரும்பு	குறும்பு, இடக்கு

பிழை	திருத்தம்
குறுத்தோலை	குருத்தோலை
கேழ்வி	கேள்வி (கேள்: பகுதி)
கைநீர்	கழுநீர்
கைமாறு	கைம்மாறு
கெடிகாரம்	கடிகாரம்
கெரடி	கரடி
கெவுளி	கெளளி
கொட்டா புளி	கொட்டுப்பிடி
கொத்தவறை	கொத்தவரை
கோதும்பை	கோதுமை
கோமியம்	கோமயம்
கோர்த்து	கோத்து
கோர்வை	கோவை (கோ பகுதி)
கோறைப்பாய்	கோரைப் பாய்
சக்காளத்தி	சககளத்தி
சங்கலி	சங்கிலி
சந்தணம்	சந்தனம்
சமயல்	சமையல் (சமை பகுதி)
சாக்கிறதை	சாக்கிரதை
சாம்பராணி	சாம்பிராணி
சாய்ங்காலம்	சாயங்காலம்
சாற்றுக்கவி	சாத்துக்கவி
சிகப்பு	சிவப்பு (சிவ பகுதி)
சிக்கணம்	சிக்கனம்
சிய்யாழி	சீகாழி
சிரோன்மணி	சிரோமணி
சிலது	சில
சிலவு	செலவு (செல் பகுதி)
சிறுவாடு	சிறுபாடு

பிழை	திருத்தம்
சீக்காய்	சிகைக்காய்
சுந்திரம்	சுந்தரம்
சுவற்றில்	சுவரில்
சுவற்றை	சுவரை
(சுவர் பகுதி)	
செத்தபொறு	சற்றேபொறு
செரங்கு	சிரங்கு
தட்சணாயணம்	தட்சிணாயனம்
தண்ணி முட்டான்	தண்ணீர்விட்டான் (செடி)
தலகாணி	தலையணை
தலைசன்	தலைச்சன்
தவக்களை	தவளை
தன்டம்	தண்டம்
வன்டி	வண்டி
(டகரத்துக்கு முன் னகரம் வராது; ணகரமே வரும்)	
தாவடம்	தாழ்வடம்
தாவலை, தேவலை	தாழ்வில்லை
தாவாரம்	தாழ்வாரம்
தாரூக்கோழி	தாராக்கோழி
திறுமுறுகாற்றுப்படை	திருமுருகாற்றுப்படை
திருவவதரித்தார்	திருவவதாரஞ் செய்தார்
திருவாணி	திருகாணி
திரேகம்	தேகம்
தீவட்டி	தீவர்த்தி
தீவரம்	தீவிரம்
தீவாளி	தீபாவளி, தீபாவலி
துகையல்	துவையல்
துகை	தொகை
(தொகு பகுதி)	

பிழை	திருத்தம்
துடங்குதல்	தொடங்குதல்
துடப்பம்	துடைப்பம்
துடர்	தொடர்
துடை	தொடை
(தொடு பகுதி)	
துபாஷ்	துவிபாஷி
துலைந்தது	தொலைந்தது
துளிர்	தளிர் (மாந்தளிர்)
துறவுகோல்	திறவுகோல்
துறுத்தி	துருத்தி
துறும்பு	துரும்பு
தெண்டம்	தண்டம்
தெண்டனை	தண்டனை
தெத்துவாய்	தெற்றுவாய்
தைவாளை	தைவேளை
தொந்திரவு	தொந்தரவு
தொந்திரை	தொந்தரை
தொப்புள்	கொப்பூழ்
தொவக்கம்	துவக்கம்
நசுகுணி	நசுக்குணி, நசுங்குணி
நஞ்சை	நன்செய்
நடலம்	நடம், நடனம்
நல்லெண்ணை	நல்லெண்ணெய்
நாத்தம்	நாற்றம்
நாராங்கி	நாதாங்கி
நிகளம்	நீளம்
(நீள் பகுதி)	
நீச்சுத்தண்ணீர், நீஸ்தண்ணி	நீராகாரம்
நீத்துப்பாவுகம்	நீற்றுப்பாகம்
நெலவரம்	நிலவரம்
நேத்தி	நேர்த்தி
நேத்து	நேற்று

பிழை	திருத்தம்
நொங்கு	நுங்கு
நோம்பு	நோன்பு
படிக்கிர	படிக்கிற
படிக்கின்ர	படிக்கின்ற
படிக்கிரான்	படிக்கிறான்
(கிறு, கின்று என்ற இடை நிலைகளில் ர ஒரு போதும் வராது.)	
பட்டிணி	பட்டினி
பண்டுவர்	பண்டிதர்
பதியம்	பதிகம்
பந்றி	பன்றி
செந்று	சென்று
[றகரத்துக்கு முன் னகரமே (றன்னகரம்) வரும்]	
பயிற்	பயிர்
அரசற்	அரசர்
தவிற்	தவிர்
(சொல்லீற்றில் வல்லின ற் ஒருபோதும் வராது)	
பயிறு	பயறு
பலது	பல
பன்து	பந்து
வன்தான்	வந்தான்
[தகரத்துக்குமுன் நகரமே (தந்நகரம்) வரும்]	
பல்லாங்குழி, பள்ளாங்குழி	பன்னாங்குழி (பதினான்குகுழி)
பாதாங் கொட்டை	வாதுமைக் கொட்டை
பாவக்காய்	பாகற்காய்
புஞ்சை	புன்செய்
புடவை	புடைவை
புட்டு	பிட்டு
புணையல்	பிணையல்

பிழை	திருத்தம்
புழக்கடை	புழைக்கடை, புறக்கடை
புழுக்கை	பிழுக்கை (ஆட்டுப் பிழுக்கை)
புஸ்த்தகம்	புஸ்தகம்
புஷ்ப்பம்	புஷ்பம்
இஷ்ட்டன்	இஷ்டன்
(ஸ், ஷ் என்னும் எழுத்துக் கட்குப் பின் மெய் யெழுத்துக்கள் வாரா.)	
பூசினி	பூசுணை
பூளை	பீளை (கண் பீளை)
பெத்தியா	பார்த்தாயா
பெத்துக்கிட்டேன்	பெற்றுக்கொண்டேன்
பொரளி	புரளி
பேரில்	மேல் (பொருள் மேல்)
பொரடைத்தல்	புடைத்தல்
பொம்பிளை	பெண்பிள்ளை
பொம்மனாட்டி	பெண்பிள்ளை
போக்கிரி	போக்கிறி (பொய்=கிறி)
போறும்	போதும்
மணத்தக்காளி	மணித்தக்காளி
மறுவீடு	மருவீடு (மரு - பொருந்துதல், மருவீடு அழைப்பு)
மனவி	மனைவி
(மனை பகுதி)	
மாட்டுப்பெண்	மனாட்டுப் பெண்
மாத்தினான்	மாற்றினான்

பிழை	திருத்தம்
மானம்பார்த்த பூமி	வானம்பார்த்த பூமி
மானாங்காணியாய்	வானாங்காணியாய்
மானாமாரி	வானாவாரி
மாக்ஷி	மாட்சி
(மாண் பகுதி)	
முடுக்கு	மிடுக்கு
முந்தாணி	முன்தானை
(முன்றானை; முன் + தானை)	
முயற்சித்தான்	முயன்றான்
முழிக்கிறது	விழிக்கிறது
(விழி பகுதி)	
முழிந்தான்	உமிழ்ந்தான்
(உமிழ் பகுதி)	
முழுங்கு	விழுங்கு
முறுகன்	முருகன் (முரு (கு = இளமை, அழகு)
மெக்கட்டு	மெய்க்காட்டு (கூலிவேலை)
மெரித்தான்	மிதித்தான்
மொழுகடி	மகிழடி
மோர்ந்து, முகர்ந்து	மோந்து
(மோ பகுதி)	
மோவாய்க் கட்டை	முகவாய்க்கட்டை
யிலை	இலை
யீரம்	ஈரம்
யெருது	எருது
யேனம்	ஏனம்
(யி, யீ, யெ, யே-என்னும் எழுத்துக்கள் சொல்லுக்கு முதலில் வாரா.)	
ரங்கன்	அரங்கன்
ரம்பை	அரம்பை
ரம்பம்	இரம்பம்
ராகம்	இராகம்
ராமன்	இராமன்
ரெட்டை	இரட்டை
ரெண்டகம்	இரண்டகம்
ரேகை	இரேகை
ரொம்ப	நிரம்ப
ரோமம்	உரோமம்
(ர, ரா, ரெ, ரே, ரொ, ரோ என்னும் எழுத்துக்கள் சொல்லுக்கு முதலில் வாரா.)	
ரூபாய்	ரூபா
லக்கம்	இலக்கம்
லத்தி	இலத்தி
லவணம்	இலவணம்
லெக்கு	இலக்கு
(லகரம் மொழிக்கு முதலில் வராது)	
வடவம்	வடகம்
வயறு	வயிறு
வரக்குள்ளே	வரற்குள்ளே
வலது	வலம்
வலதுகை	வலக்கை (வலம் + கை)
வவுத்துவலி	வயிற்றுவலி
வழவு	வளவு, வளைவு, வீடு
வாக்கப்படு	வாழ்க்கைப்படு
வாணால்	வாழ்நாளை வாணாளை,
வாய்வு	வாயு

பிழை	திருத்தம்
வாழ்த்தும் படிக்கோறுதல்	வாழ்த்தும்படி கோருதல்
விசிரி	விசிறி
விடியங்காட்டி	விடியுமுன்
விரால்	வரால்
விரை, வெரை	விதை
விற்க்கும், விர்க்கும்,	விற்கும் (வில் பகுதி)
முயற்ச்சி, முயர்ச்சி	முயற்சி (முயல் பகுதி)
கற்ப்பு, கர்ப்பு	கற்பு (கல் பகுதி)
(வல்லின ற் என்னுமெழுத்திற்குப்பின் க், ச், ப் ஒருபோதும் வாரா)	
வுண்டு	உண்டு
வூது	ஊது
வொட்டகம்	ஒட்டகம்
வோடம்	ஓடம்
(வு, வூ, வொ, வோ என்னும் எழுத்துக்கள் சொல்லுக்கு முதலில் வாரா)	
விளார், விளாறு	வளார்,
வெங்கலம்	வெண்கலம்
வெண்ணை	வெண்ணெய் (வெள் + நெய்)
வெய்யல்	வெயில், வெய்யில்
வெரக்கடை	விரற்கிடை
வெள்ளங் காட்டி	வெள்ளெனக் காட்டி

பிழை	திருத்தம்
வென்னீர்	வெந்நீர்
வேக்குரு	வேர்க்குரு
வேணும்	வேண்டும்
வேண்டாம்	வேண்டா (வேண்டும் என்பதற்கு எதிர் மறை)
வேஷ்டி	வேட்டி
வைக்கல்	வைக்கோல்
றங்கன்	அரங்கன்
றாமன்	இராமன்
றோமம்	உரோமம்
குறுமா	குருமா
அபறாதம்	அபராதம்
அலமாறி	அலமாரி
பிறமாணம்	பிரமாணம்
பிறாமணன்	பிராமணன்
(வடசொல், திசைச்சொற்களில், றகரம் ஒருபோதும் வாராது; ரகரமே வரும்)	
னண்டு	நண்டு
னாரை	நாரை
னிலம்	நிலம்
னொண்டி	நொண்டி
னுட்பம்	நுட்பம்
னோக்கம்	நோக்கம்
(ன, னா, னி, னு, னொ, னோ என்னும் எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வாரா. தந்நகரமே வரும்)	
ஸ்றீகள்	ஸ்திரீகள்

2. ரகர, றகரச் சொற்களின் வேறுபாடுகள்

அற-நீங்க, மிக
அரமனை, அரண்மனை-அரச மாளிகை
அரம்-ஒரு கருவி
அறம்-தருமம், ஈகை
அரி-திருமால், சிங்கம், அறுத்தல்
அறி - தெரிந்துகொள்
அரிசி - நெல்லரிசி
அறிகுறி - அடையாளம்
அரவு - பாம்பு
அறவு - நீக்கம், முடிவு
அரிவாள் - கொடுவாள்
அரிவை-தெய்வப்பெண்
அரு-அரிய, அருமையான
அறு - துண்டி, வெட்டு
அருகு - பக்கம், அண்மை
அறுகு - ஓர் புல்
அருந்து - உண், சாப்பிடு
அறுந்து - அறுபட்டு
அரும்பு-முகை, மலர் அரும்பு
அருவருப்பு-வெறுப்பு
அருவி - நீர்வீழ்ச்சி
அறுபதம் - வண்டு
அறுகீரை-ஒருவகைக் கீரை
அரை-பாதி, இடை, (மாவை அரை)
அறை - (வீட்டின்) அறை, கன்னத்தில் (அறை), சொல்
அறைகூவல் - போருக்கழைத்தல்
அலரி - ஒருவகைப் பூ
அலறி-கதறி
ஆர - நிறைய
ஆற-தணிய, புண்ஆற

ஆரம்பம் - துவக்கம்
ஆரல் - ஒருவகை மீன்
ஆறு - வழி, நதி
(அவ்வாறு - அவ்விதம்)
இர, (இரப்பு) - வேண்டு, பிச்சையெடு
இற, (இறப்பு) - கட, சா
இறகு - பறவையின் இறகு
இரங்கு-மனமுருகு, அருள்கூர்
இறங்கு-கீழிறங்கு
இடறி - கால்தவறி
இரவு-இராத்திரி, அல்
இரு-உட்கார்
இறு, (இறுத்தல்) - அறு, வடி
(நீர்) இறுதி - முடிவு
கை இருப்பு - கையிலுளது
இறுமாப்பு-செருக்கு, மமகாரம்
இராட்டு - கைராட்டினம்
இரும்பு-ஓர் உலோகம், கரும்பொன்
இறம்பு-சிறுமலை, புதர், குறுங்காடு
இறும்பூது - வியப்பு, தாமரைப் பூ
இரை-விலங்குணவு, தீனி, ஒலி
இறை-சிதறு, வரி, அரசன், கடவுள், (தண்ணீர்) இறை
இரைச்சல் - ஒலிமிகுதி
இறைச்சி-மாமிசம், புலால்
ஈர் - இரண்டு
ஈறு - இறுதி, முடிவு, பல்லீறு
உறக்கம் - தூக்கம்
உரல்-(மாவிடிக்கும்) உரல்
உறல்-பொருந்துதல், அடைதல்

உரவு - வலிமை, உப்பு
உறவு - கலந்து வாழ்தல்
உராய்தல் - தேய்தல்
உரி-கழற்று, தோலுரி, மரப் பட்டை, அரைப்படி, சுதந் தரம்
உறி - (நெய், மோர்) உறி
உரிமை - சுதந்தரம்
உரிய - சொந்தமான
உறிய - உறிஞ்ச
உரு - வடிவம், உருவம்
உறு - பொருந்து, மிகுதி
உருக்கு - இளகச்செய்
உருசி - சுவை
உறுதி - திடம்
உறுப்பு - அவயவம்
உருமு - இடி
உறுமு - கர்ச்சி
உருள் - சுழல்
உருவி-நாயுருவி, பிடுங்கி
உரை-சொல், தேய்
உறை - இறுகு, மூடி, இடம், (தலையணை உறை)
உறைப்பு - காரம்
உற்பத்தி - தோற்றம், துவக்கம்
ஊர - நகர, பரவ
ஊற - சுரக்க, நனைய
ஊருணி-ஊரார் உண்ணும் நீர்க்குளம்
ஊறு - இடையூறு
ஊறுகாய் - ஊறவைத்த காய்
எரி-தீ, நெருப்பு, எரிதல்
எறி - விசு, வீசி யெறி
எரு - வரட்டி, மலம்
எருமை - மாடு (காரா)
எருக்கு ஓர் செடி
எறும்பு - ஒரு பிராணி
ஏரி-பெரியகுளம், நீர்நிலை
ஏறி - மேலே ஏறி
ஏர் - உழவு ஏர்
ஏராளம் - மிகுதி
ஏமாறு - வஞ்சிக்கப்படு
ஏற்பாடு - திட்டம்
ஐயுறவு - சந்தேகம்
ஒரு - ஒன்றாகிய
ஒறு - தண்டி
ஒற்றன் - தூதன்
கர - ஒளிந்துகொள்
கற - பால் கற, பீச்சு
கரி - யானை, அடுப்புக்கரி
கறி - கடி; (காய்) கறி; மிளகு
கருத்து - எண்ணம்
கறுத்து-கோபித்து, சினந்து
கருப்பு - பஞ்சம்
கறுப்பு - கருமை நிறம்
கரும்பு - கன்னல்
கருமாயம்-மிகுதியான விலை
கருவி - ஆயுதம்
கறுவி - கோபித்து
கரை - ஓரம், குளக்கரை
கறை-களங்கம், மாசு, குற்றம்
கறையான் - செல்
கவர் - அபகரி
கவறு - சூதாடு கருவி
கவற்சி - துன்பம் (கவல் பகுதி)
காரணம் - முதல், ஏது
காரியம் - செயல்
கிரி - மலை
கார் - மேகம்
காறல் - காறியுமிழ்தல்
கிராமம் - சிற்றூர்

கிரி - ஒருவகைப் பிராணி
கிறி - கிழித்து, எழுதி
குரங்கு - வானரம், மந்தி
குறங்கு - தொடை
குறடு - திண்ணை, பற்றுக்குறடு
குரம்-குளம்பு
குறம்-குறத்தி சொல்லுங் குறி
குரவன்-பெரியோன், ஆசான்
குறவன் - ஒரு குலத்தான்
குரவை - கூத்து
குறவை - ஒருவகை மீன்
குறள் - ஒருவகைப்பா, (திருக்குறள்)
குரு - ஆசிரியன், சிறு பரு
குறு - குட்டையான
குருதி - இரத்தம்
குருகு - நாரை
குறுகு - சமீபி, கிட்டு
குருக்கு - ஓர் செடி
குறுக்கு-நடுமுதுகு, நடு, இடை
குருடு - கண் குருடு
குறும்பி - காதுக்குறும்பி
குரும்பை-தென்னை, பனை முதலியவற்றின் பிஞ்சு
குறும்பை - ஓர் ஆடு
குறி - அடையாளம்
குறிப்பு - சைகை
கூரிய - கூர்மையான
கூறிய - சொல்லிய
கூறு - சொல், பங்கு
கூரை - முகடு, வீட்டின் மேற்புறம்
கூறை - துணி, புடைவை
கோரல் (கோருதல்) - விரும்புதல், வேண்டுதல்
கோறல் - கொல்லுதல்
சாருதல் - சார்ந்திருத்தல்
சாறுதல் - தானியம் பெருக்குதல்
சாறு-இரசம். (பனஞ்) சாறு
சிரங்கு - நோய்
சிரசு - தலை
சிரைத்தல்-முடி எடுத்தல்
சிறப்பு - மேன்மை
சிறுவன் - இளையன்
சிறை - சிறைச்சாலை
சீரகம்-ஒரு கறிப்பொருள்
சீரிய - சிறந்த
சீறிய - கோபித்த
சுரங்கம்-(பொன்) சுரங்கம்
சுரா - கள்
சுறா - ஒருவகை மீன்
சுருக்கு - சுருங்கச் செய்
சுறுக்கு - விரைவு
சுறுசுறுப்பு-மிகுந்த ஊக்கம்
சுரை - ஒருவகைக் கொடி
சுவர் - மதில்
சுவறு - வற்று, (நீர்) சுவறுதல்
சூரன் - வீரன்
சூரியன்-ஞாயிறு, பகலவன்
சூறை - கொள்ளை, புயற்காற்று
செரித்தல் - சீரணமாகுதல்
செறித்தல் - திணித்தல்; அடக்குதல்
செரு - போர்
செறு - வயல், கோபி, திணி
செருக்கு - அகங்காரம்
சேரல் - கிட்டல்
சேறல் - செல்லுதல்
சேறு - மண்குழம்பு
சொரி - பொழி, கொடு
சொறி - தினவுநோய் (சொறி சிரங்கு)

சோறு - சாதம்
சோர்வு - தளர்ச்சி, மெலிவு
தரி-அணி, பொறு, தங்கு
தறி-வெட்டு, துணிநெய்யுந்தறி, [கம்பம்
தரு - மரம்
தறு-கட்டு, முடி
தறுகண் - அஞ்சாமை
தவறு - குற்றம்
தவறி - பிசகி
தவிர் - நீக்கு
தார் - பூமாலை
தாறு - குலை, முட்கோல்
தாறுமாறு - குழப்பம்
திற - மூடியைத்திற
திரம் - உறுதி, நிலை
திறம்-வல்லமை, பக்கம், வகை
திருகு - முறுக்கு
திருடன் - கள்ளன்
திறவுகோல்-சாவி
திரும்பு - மீண்டுபோ
திரை - அலை, திரைச்சீலை
திறை - கப்பம், அரசிறை
துறக்கம் - வீடு
துரவு - பெரிய கிணறு
துறவு - துறத்தல், ஆசையை ஒழித்தல்
துரத்தல் - செலுத்துதல்
துறத்தல் - நீக்குதல், ஒழித்தல்
துரு - இரும்பழுக்கு
துறு - நெருங்கு, அமுக்கு
துருத்தி-உலையூது கருவி
துருவல்-கடைதல், துளைத் [தல்
துரை - பிரபு, தலைவன்
துறை - நீர்நிலையில் இறங்குமிடம், ஆறு, பிரிவு
துறைமுகம் - கப்பல் தங்குமிடம்

தூரம் - தொலை
தூர்-வேர், அடி, சேறு
தூறல் - சிறு மழை
தெரி - தோன்று, அறி, பொறுக்கி எடு
தெறி-சிதறு, விரலால் உந்து
தெரு - வீதி
தெறு - அழி
தேரல்-ஆராய்தல், பயிலல்
தேறல்-தெளிதல், தேன், தேர்வில் தேறுதல்
தேர்வு-பரீட்சை, சோதனை
தேர் - இரதம்
தோறும் - (நாள்) தோறும்
நருக்கு - நசுக்கு
நறுக்கு - துண்டி
நரை - வெண்மயிர், தலைநரை
நறை - தேன், வாசனை
நாரி - பெண்
நாறி - நாற்றம் வீசி
நிறம் - வருணம்
நிரம்பிய - நிறைந்த
நிருத்தம் - நடம், நடனம்
நிறுத்தம் - நிறுத்துதல்
நிருபம் - கடிதம்
நிறுத்தல்-எடை போடுதல், நிற்கச் செய்தல்
நிரை - வரிசை, மந்தை, ஓர் அசை
நிறை - நிறைவு, மனவடக்கம், கற்பு
நீறு-திருநீறு, விபூதி, பஸ்மம்
நெரி-உடை, நெருக்கு, நசுக்கு
நெறி-மதம், வழி, புருவத்தை வளை, நீதி
நெருங்கி - சமீபித்து
நெருப்பு - தீ

நேரம் - பொழுது
நேருதல் - ஏற்படல்
பரந்த - பரவிய
பறந்த - பறந்த (பறவை)
பரபரப்பு - அவசரம்
பரவை - கடல்
பறவை - பட்சி, புள்
பரம்பு - பரம்புப் பலகை
பறம்பு - ஒரு மலை
பரி-குதிரை, இரங்கு, விரும்பு
பறி-பிடுங்கு, தோண்டு, அபகரி
பரிசு - வெகுமதி
பரிந்து - அன்புகொண்டு
பருந்து - ஓர் பறவை
பருத்தி - பஞ்சு
பருவம் - காலம்
பரை - பார்வதி
பறை - சொல், தம்பட்டம்
பாரை - கம்பி, கடப்பாரை
பாறை - கற்பாறை, கல் நிலம்
பிர - பிர(பஞ்சம்), வடமொழி உபசர்க்கம்
பிற - மற்ற, தோன்று
பிறகு - பின்
பிறப்பு - தோற்றம்
பிரயாணம் - வழிப்போக்கு
பிரயோசனம் - பயன்
பிரிவு - விட்டுப்பிரிதல்
புரணி - ஊன்
புறணி - புறங்கூறல், மட்டையின் உட்பக்கம்
புரம் - பட்டணம், நகர், காப்பு
புறம் - பக்கம், முதுகு, பின்பு, வெளி
புறப்படு - பயணம்போ
புறப்பாடு - பரு, பயணம்
புரவு-காப்பு, ஆட்சி
புறவு - புறா, புறம்போக்கு
பெரு - பெரிய
பெறு - அடை, பிள்ளை பெறு
பேர் - பெயர்
பேறு - பாக்கியம், இலாபம், புண்ணியம்
பொரி - நெற்பொரி
பொறி-தீட்டு, எழுது, இயந்திரம், தீத்துகள், புலனுறுப்பு
பொரியல்-பொரியல் (கறி)
பொரு - ஒப்பாகு, போர்செய்
பொறு - பொறுத்துக்கொள், தாங்கு
பொருட்டு - காரணம்
பொருத்தம் - தகுதி
பொருக்கு - சோற்றுவடு, தோசைப் பொருக்கு
பொறுக்கு - தெரிந்தெடு
பொருப்பு - மலை
பொறுப்பு - உத்தரவாதம், கடமை
பொறுமை - சாந்தம், சகிப்புத்தன்மை
பொருமை - மனவெரிச்சல்
மர-கடினமாகு, உணர்ச்சியறு
மற - மறந்துபோதல்
மரம் - விருட்சம்
மறம் - வீரம், பாவம், கொலை
மரி - சா, இற
மறி - தடு, மான், ஆட்டுக்குட்டி
மரு - வாசனை
மறு - குற்றம், களங்கம், மற்ற
மருகு - காட்டுமல்லிகை
மறுகு - மயங்கு, நெடுந்தெரு
மருகி - மருமகள்
மறுகி - தயங்கி

மருமகள் - மகன்மனைவி
மருமகன் - மகள்கணவன்
மருவல் - பொருந்துதல்
மருவீடு - மணமக்களை வீட்டுக்கழைத்தல்
மரை-ஒரு மான், திருகுசுரை, தாமரை
மறை - ஒளித்தல், வேதம், இரகசியம்
மாரன் - மன்மதன்
மாறன் - பாண்டியன்
மாரி - மழை
மாறி - வேறுபட்டு
முறம் - சுளகு
முரண் - மாறுபடுதல்
முரி - ஒடி, கெடு
முறி-தளிர், இலை, பட்டையம்
முருக்கு - ஒரு மரம்
முறுக்கு-திருக்கு, அதட்டு, தின்பண்டம்
முருகன் - அழகன், கந்தன்
முருகு-வாசனை, அழகு, இளமை
முறுகு - திருகு, பதங் கடந்து வேகு
முருங்கை - ஓர் மரம்
முருடு - முரடு
மெய்யுரை-உண்மைச் சொல்
மெய்யுறை - கவசம், அங்கி
வரம் - அருள்
வறம் - வறட்சி
வரலாறு - சரித்திரம்
வருத்தல்-துன்பப்படுத்தல்
வறுத்தல் - காய்களை வறுத்தல்
வறுவல் - வறுத்தகறி
வறுமை - தரித்திரம்
வரை - மலை, மூங்கில், அளவு, வரி
வறை - துவட்டற்கறி, பொரித்த காய்கறி
வர்க்கம் - இனம்
வற்புறுத்து-வலிந்து சொல்
விசிறி - காற்றசைகருவி
விரகு - தந்திரம்
விறகு - எரிக்குங் கட்டை
விரல் - கைவிரல்
விறல் - வெற்றி, வலிமை
விருப்பம் - ஆசை
விருந்து - உணவளித்தல்
விரை - விதை, வேகமாகு
விரைவு - வேகம்
விறை-கடினமாகு, மரத்துப்போ
வீரி - காளி
வீறி - ஓங்கி
வீறிட்டு - சத்தமிட்டு அலறி
வீற்றிரு - சிறந்திரு
வெரு - பயம், அச்சம்
வெறு-பகை, மிகுதல், வெறுப்புக்கொள்
வெறுமை-ஒன்றுமில்லாமை
வேர் - மரவேர்
வேறு - மற்ற

[குறிப்பு :—காறல், காரல்; சுறண்டு, சுரண்டு; சுறீர், சுரீர்; தறுவாய், தருவாய்; நறுக்கு, நருக்கு; முறி, முரி; என்னுஞ் சொற்கள் வேறுபாடின்றி வழங்குகின்றன.]

3. ளகர, ழகரச் சொற்களின் வேறுபாடுகள்

அளகம் - பெண்மயிர்
அளகு-பெண் பறவை, கோழி
அழகு - அலங்காரம்
அளம் - உப்பளம்
அளி - வண்டு, அருள், கா
அழி - கெடு
அழுக்கு-மாசு, பொறாமை
அளை - துழாவு, கல, தயிர், குகை
அழை - கூப்பிடு, பெயரிடு
அள் - அள்ளு
ஆழம் - பள்ளம்
ஆளி-அரசன், ஆள்வோன், சிங்கம்
ஆழி - கடல், சக்கரம், மோதிரம்
ஆள்-புழங்கு, அரசுசெய், ஆண்மகன், ஊழியன்
ஆழ்-அமுக்கு, தாழ்த்து
ஆள்வார் - ஆளுவோர்
ஆழ்வார் - திருமால் அடியவர்
இளகு - நெகிழ்தல்
இழ - தொலை, போக்கடி
இளை -- மெலிதல், களைத்தல்
இழை - தேய், செய், நூல்
உளம் - உள்ளம்
உளவு - வேவு, மறைவு
உழவு - பயிர்த்தொழில், வருத்தம், முயற்சி
உளறு - பிதற்று
உளி - தறிக்குங் கருவி
உழி-இடம், ஏழாம் வேற்றுமையுருபு
உளுக்கு - சுளுக்கு
உளுந்து-ஒருவகை தானியம்
உளை-நோகு, சேறு, பிடரிமயிர்
உழை - வருந்தி வேலைசெய், மான், பக்கம்
எழுதல் - உயர்தல், கிளம்புதல், வரைதல்
எழுத்தாணி - ஓலையிலெழுதுங் கருவி
எள் - நிந்தை, ஒரு தானியம், எளிமை
எளிது - இலேசு
எளிய - அற்ப
ஒளி-மறை, வேதம், வெளிச்சம், புகழ்
ஒழி - அழி, நீக்கு
களம் - போர்க்களம், நெற்களம்
களர் - விளையா நிலம்
களவு - திருட்டு
களி - மகிழ்ச்சி
கழி - நீக்கு, கோல், மிகுந்த
களை - முகவழகு, நீக்கு, இளை
கழை-கோல், கரும்பு, மூங்கில்
கள் - மது
களிம்பு-துரு, பூச்சு மருந்து
கழுகு - ஒரு பறவை
கழுதை - ஒரு விலங்கு
கழுவல் - தூய்மை செய்தல்
காளி - துர்க்கை
காழி - சீகாழி
காளை - எருது, வாலிபன்
கிளவி-சொல் (எழுதாக்கிளவி)
கிழவி - உரியவள், முதியாள்
கிழி-கிழித்தல், பணமுடிச்சு
கீள் - கோவணம், தோண்டு
கீழ் - கீழே, தாழ்வு

குளம் - தடாகம்
குளவி - வண்டுவகை
குழவி - குழந்தை
குளம்பு - விலங்கின் அடி
குழம்பு - சேறு, காய்கறிக் குழம்பு
குளி - முழுகு
குழி - கிடங்கு, பள்ளம்
குழை - குண்டலம்; தளிர்
குளுகுளு-குழைவுக்குறிப்பு
குழு - கூட்டம்
கூளம் - குப்பை, வைக்கோல் கூளம்
கூழம் - எள்
கூளி - பேய்
கூழி - குள்ளப் பசு
கேள் - செவிகொடு, நட்பு
கேழ் - பொருந்து, நிறம், ஒளி
கேழ்வு - தோணிக்கூலி
கேழ்வரகு - ஒரு தானியம்
கேளி - மகளிர் விளையாட்டு
கொளு - பொருந்து
கொழு - கொழுப்பாகு, ஏர்க்காறு
கொளுந்து - எரி
கொழுந்து - இளஇலை, மருக்கொழுந்து
கோளி - கோள்பவள், ஆல், அத்தி
கோழி - ஒரு பறவை
கோள் - புறங்கூறல்
சுளி - முகங்கோணு, கோபி
சுழி-வளை, வட்டமிடு, நீர்ச்சுழி
சூள் - ஆணை
சூழ் - ஆராய், முற்றுகை இடு
சோளம் - ஒரு தானியம்
சோழம் - ஒரு நாடு
தளை - கட்டு, விலங்கு
தழை - இலை, தழைத்தோங்கு

தாளம் - இசைக்கால வளவு
தாழம் - தாழ்வு
தாளி - பனை
தாழி - பெரும்பானை, சாடி
தாள்-கால், முயற்சி, செடி முதலியவற்றின் அடித்தண்டு
தாழ்-கீழாகு, கதவடைகோல், பணி
தெளி - தெளிவாகு, சிதறு
தெழி - அதட்டு, வருத்து
தோளன் - தோளையுடையவன்
தோழன் - நண்பன்
துளை - துவாரம்
நாளி - மூங்கில், நாய்
நாழி - படி, நாழிகை
நுழை - புகு
பழி - குற்றம்
பளிச்சு-ஒளிவீச்சுக் குறிப்பு
பளு - கனம்
பழு - முதிர், கனி
பாளை - பூமூடு மடல்
பாழ் - வீண், அழிவு
பீளை - கண் மலம்
பீழை-புழுங்குதல், துன்பம்
புளுகு - பொய்
புழுகு - புனுகு
பூளை - இலவம் பஞ்சு
பூழை - துவாரம், சிறுவாசல்
பொளி - கொத்து, சுத்தியடி
பொழி - ஊற்று, சொரி
போளி . ஒருவகை யப்பம்
மழை - வான்பொழி நீர்
மாளிகை-அரண்மனை, பெரு வீடு
மாளுதல் - இறத்தல்
மிளகு - கறிமிளகு

முளவு - முள்ளம் பன்றி
முழவு - மத்தளம்
முளை - தோன்று, விதைமுளை
முழை - குகை
மூளி - காதறை, விளிம்பில்லாதது
மூளை - மண்டை உள்ளீடு
மூழை - அகப்பை, துடுப்பு
மூள் - மிகு
மூழ் - அமிழ்ந்து போதல்
மேழி - கலப்பை
மேளம் - தவல் வாத்தியம்
வளம் - அழகு, செல்வம்
வளி - காற்று
வழி - பாதை, நிரம்பிவிழு
வளை - வட்டமாக்கு, துவாரம்
வழை - சுரபுன்னை மரம்
வாளி - அம்பு, வளையம்
வாழி - வாழ்க
வாளை - ஓர் மீன்
வாழை - ஒரு மரம்
வாள் - ஒளி, ஒரு கருவி
வாழ் - உயிரோடிரு
விளா - ஒரு மரம்
விழா - திருவிழா, கொண்டாட்டம்
விளி - கூப்பிடு, இற
விழி - கண்திற, பார்
விளை - வளர், முதிர், உண்டுபண்ணு
விழை - விரும்பு
வெள்ளம் - நீர்ப்பெருக்கு
வேளம் - சிறைக்களம்
வேழம் - கரும்பு, மூங்கில், யானை
வேளை - காலம், ஒரு பூடு

[குறிப்பு : இழிவு, இளிவு ; உழறு, உளறு ; உழந்து, உளுந்து ; குழறு, குளறு ; சுழி, சுளி ; துழாய், துளாய் ; பவழம், பவளம் ; என்பன வேறுபாடின்றி வழங்குகின்றன.]

4. ஆண்பால் பெண்பாற் பெயர்கள்

ஆண்பால்	பெண்பால்	ஆண்பால்	பெண்பால்
அச்சன்	அச்சி	முடவன்	முடத்தி
ஆடவன்	பெண்டு	ஆதிரையான்	ஆதிரையாள்
ஊமையன்	ஊமைச்சி	கருவூரான்	கருவூராள்
கரியன்	கரியள்	சோழியன்	சோழிச்சி
குட்டையன்	குட்டைச்சி	தெலுங்கன்	தெலுங்கச்சி
குருடன்	குருடி	அமைச்சன்	அமைச்சி
கூனன்	கூனி	அரசன்	அரசி
சிறியன்	சிறியள்	ஆசிரியன்	ஆசிரியை
சிறுவன்	சிறுமி	ஆயன்	ஆய்ச்சி
செவிடன்	செவிடி	இடையன்	இடைச்சி
நெட்டையன்	நெட்டைச்சி	உபாத்தியாயன்	உபாத்தியாயனி
பெரியன்	பெரியள்	உழவன்	உழத்தி

ஆண்பால்	பெண்பால்	ஆண்பால்	பெண்பால்
எயினன்	எயிற்றி	முதலியார்	முதலிச்சி
ஒருவன்	ஒருத்தி	வணிகன்	வணிகச்சி
ஓதுவான்	ஓதுவாள்	வண்ணான்	வண்ணாத்தி
கணக்கன்	கணக்கச்சி	வீரன்	வீரி
கணவன்	மனைவி	வேலைக்காரன்	வேலைக்காரி
கண்ணன்	கண்ணாத்தி	வேளாளன்	வேளாட்டி
குறவன்	குறத்தி	அண்ணன்	அண்ணி
சீமான்	சீமாட்டி	அப்பன்	அம்மை,
செட்டி	செட்டிச்சி		அன்னை
செல்வன்	செல்வி	காதலன்	காதலி
தச்சன்	தச்சச்சி	கொழுந்தன்	கொழுந்தி
தட்டான்	தட்டாத்தி	சிற்றப்பன்	சின்னம்மை
தனவான்	தனவந்தி	தந்தை	தாய்
திருவாளன்	திருவாட்டி	தமையன்	தமக்கை
தோழன்	தோழி	தம்பி	தங்கை
நண்பன்	நண்பி	நம்பி	நங்கை
நம்பி	நங்கை	பாட்டன்	பாட்டி
நல்லன்	நல்லள்	புதல்வன்	புதல்வி
பண்டிதன்	பண்டிதை	பேரன்	பேர்த்தி
பரவன்	பரத்தி	மகன்	மகள்
பள்ளன்	பள்ளி	மருமகன்	மருமகள்
பறையன்	பறைச்சி	மாமன்	மாமி
பார்ப்பனன்	பார்ப்பனி	இந்திரன்	இந்திராணி
பார்ப்பான்	பார்ப்பாத்தி	சிவன்	சிவை
பிரான்	பிராட்டி	அலவன்	பெடை நண்டு
பிராமணன்	பிராமணத்தி	கடா	கிடாரி, மறி
புலவன்	புலத்தி	காளை	பசு
புலையன்	புலைச்சி	கூகை	போத்து
பெருமான்	பெருமாட்டி	சேங்கன்று	கிடாரி
பொன்னன்	பொன்னி	சேவல்	பெட்டை
மருத்துவன்	மருத்துவச்சி	கடுவன்	மந்தி
மாணாக்கன்	மாணாக்கி	கலை	பிணை
மாணவன்	மாணவி	களிறு	பிடி

5. வல்லெழுத்துக்கள் மிகும் இடங்கள்

[வல்லெழுத்துக்கள் ஆறனுள் க, ச, த, ப ஆக நான்குமே மொழிக்கு முதலில் வருவன]

'அ' இறுதிச் சொற்கள்'

அ + கிளி = அக்கிளி
அந்த + காளை = அந்தக் காளை
இந்த + பசு = இந்தப் பசு
எந்த + தட்டு = எந்தத் தட்டு
அது தவிர + தேடினன் = அது தவிரத் தேடினன்
அதுபோல + கூறினன் = அது போலக் கூறினன்
பைய + சென்றான் = பையச் சென்றான்
மெல்ல + பேசினன் = மெல்லப் பேசினன்
சால + பேசினன் = சாலப் பேசினன்
மிக + சொன்னன் = மிகச் சொன்னன்
மற்ற + காடி = மற்றக் காடி

ஆக; என; விட :—

வருவதாக + கூறினன் = வருவதாகக் கூறினன்
போவதாக + சொன்னன் = போவதாகச் சொன்னன்
பாடென + கொடுத்தான் = பாடெனக் கொடுத்தான்
தேடென + சொன்னன் = தேடெனச் சொன்னன்
அவனைவிட + பெரியவன் = அவனைவிடப் பெரியவன்
அதைவிட + சிறியது = அதைவிடச் சிறியது

'ஆ' இறுதிச் சொற்கள்'

இல்லா + தாழ்வு = இல்லாத் தாழ்வு
பொல்லா + காலம் = பொல்லாக்காலம் [னை
ஓடா + குதிரை = ஓடாக் குதி
தேடா + பொருள் = தேடாப் பொருள்
பெய்யா + கொடுக்கும் = பெய்யாக் கொடுக்கும்
தேடா + சென்றான் = தேடாச் சென்றான்
கூவா + சேவல் = கூவாச் சேவ
புறா + கூடு = புறாக் கூடு [ல்
இரா + பள்ளிக்கூடம் = இராப் பள்ளிக்கூடம்
சுறா + துண்டம் = சுறாத் துண்டம்
கனா + கண்டான் = கனாக் கண்டான்

'இ' இறுதிச் சொற்கள்'

இ + செடி = இச்செடி [ய்
அப்படி + செய் = அப்படிச்செ
இப்படி + கூறினன் = இப்படிக் கூறினன்
எப்படி + போனன் = எப்படிப் போனன்

இனி + பேசு = இனிப்பேசு
தனி + குடம் = தனிக்குடம்

அன்றி; இன்றி;

தடையின்றி + செய்தான் = தடையின்றிச் செய்தான்
மெய்யன்றி + புகழ்பெற்றான் = மெய்யன்றிப் புகழ்பெற்றான்
கட்டி + கொண்டான் = கட்டிக்கொண்டான்
தேடி + சென்றான் = தேடிச் சென்றான்
கூடி + பேசினான் = கூடிப் பேசினான்
பாதி + துணி = பாதித்துணி
உரி + காய் = உரிக்காய்
நாழி + பழம் = நாழிப்பழம்
கிளி + கூடு = கிளிக்கூடு
கூலி + தொழில் = கூலித் தொழில்
பழி + சொல் = பழிச்சொல்
மார்கழி + திங்கள் = மார்கழித் திங்கள்

'ஈ' இறுதிச் சொற்கள்

ஈ + கால் = ஈக்கால்
தீ + குணம் = தீக்குணம்
பூ + பறி = பூப்பறி

'உ' ஈற்றுச் சொற்கள்

உ + பக்கம் = உப்பக்கம்
அங்கு + போ = அங்குப்போ
இங்கு + செல் = இங்குச் செல்
எங்கு + கண்டாய் = எங்குக் கண்டாய்
ஆங்கு + கேட்டான் = ஆங்குக் கேட்டான்
ஈங்கு + பார்த்தான் = ஈங்குப் பார்த்தான்
யாங்கு + சென்றான் = யாங்குச் சென்றான்
ஆண்டு + சென்றான் = ஆண்டுச் சென்றான்
ஈண்டு + போந்தான் = ஈண்டுப் போந்தான்
யாண்டு + கூறினான் = யாண்டுக்கூறினான்
மற்று + சிறியன் = மற்றுச் சிறியன்
அதற்கு + கொடு = அதற்குக் கொடு
அவனுக்கு + சொல் = அவனுக்குச் சொல்
கொக்கு + கால் = கொக்குக் கால்
கற்று + கொடு = கற்றுக்கொடு
சற்று + பொறு = சற்றுப் பொறு
எட்டு + தலை = எட்டுத்தலை
பத்து + பனை = பத்துப்பனை
திரு + குளம் = திருக்குளம்
புது + கோட்டை = புதுக் கோட்டை
நடு + பகல் = நடுப்பகல்
கன்று + குட்டி = கன்றுக்குட்டி
இரும்பு + பூண் = இரும்புப்பூண்
அம்பு + தலை = அம்புத்தலை
செம்பு + தண்ணீர் = செம்புத் தண்ணீர்
அரவு + தோல் = அரவுத்தோல்
இரவு + காலம் = இரவுக்காலம்
புறவு + தலை = புறவுத்தலை

'எ' 'ஏ' இறுதிச் சொற்கள்

எ + காலம் = எக்காலம்
எ + கடிது = எக்கடிது

'ஐ' இறுதிச் சொற்கள்

அவ்வகை + செய்தான் = அவ்வகைச் செய்தான்
இவ்வகை + கற்றான் = இவ்வகைக் கற்றான்
எவ்வகை + திருத்தினன் = எவ்வகைத் திருத்தினன்
மற்றை + பொருள் = மற்றைப் பொருள்
அவனை + கண்டான் = அவனைக் கண்டான்
என்னை + தேடினன் = என்னைத் தேடினன்
பொருளை + பெற்றான் = பொருளைப் பெற்றான்
நல்லாரிடை + புக்கு = நல்லாரிடைப்புக்கு
மலையிடை + பிறவா = மலையிடைப் பிறவா
அரை + பணம் = அரைப்பணம்
மலை + பாம்பு = மலைப்பாம்பு
சிறை + கூடம் = சிறைக் கூடம்
பறவை + கூடு = பறவைக் கூடு
குதிரை + குளம்பு = குதிரைக் குளம்பு
வாழை + பழம் = வாழைப் பழம்
பனை + கை = பனைக்கை

'ஓ' இறுதிச் சொல்

ஓ + கொடிது = ஒக்கொடிது

'மெய்' இறுதிச் சொற்கள்

அவ்விதம் + கொடுமை = அவ்விதக் கொடுமை
இவ்விதம் + பொறுமை = இவ்விதப் பொறுமை
எவ்விதம் + தீமை = எவ்விதத் தீமை
எல்லாம் + சொற்களும் = எல்லாச் சொற்களும்
எல்லாம் + படியாலும் = எல்லாப் படியாலும்
பணம் + பை = பணப்பை
கமலம் + கண் = கமலக்கண்
நிலம் + பனை = நிலப்பனை
அகலம் + துணி = அகலத்துணி
வட்டம் + பலகை = வட்டப் பலகை
நாய் + தலை = நாய்த்தலை
வாய் + பேச்சு = வாய்ப் பேச்சு
போய் + சொல் = போய்ச் சொல்
தயிர் + குடம் = தயிர்க்குடம்
பயிர் + தொழில் = பயிர்த் தொழில்
மலர் + சோலை = மலர்ச் சோலை
நீர் + பாம்பு = நீர்ப்பாம்பு
ஊழ் + பயன் = ஊழ்ப்பயன்
கீழ் + குலம் = கீழ்க்குலம்
கீழ் + காற்று = கீழ்க்காற்று
(கீழ்குலம், கீழ்காற்று என மிகாமலும் வரும்)

6. வல்லெழுத்துக்கள் மிகா இடங்கள்

'அ'. 'ஆ' இறுதிச் சொற்கள்

சில + செல்வம் = சில செல்வம்
பல + குதிரை = பல குதிரை
நல்ல + பாம்பு = நல்ல பாம்பு
கெட்ட + பையன் = கெட்ட பையன்
வந்த + காலம் = வந்த காலம்
பேசின + பேச்சு = பேசின பேச்சு
எழுதின + புத்தகம் = எழுதின புத்தகம்
பாடுகிற + பாட்டு = பாடுகிற பாட்டு
வருகிற + காலம் = வருகிற காலம்
அண்ணா + கொடு = அண்ணா கொடு
அவனா + செய்தான் = அவனா செய்தான்

'இ', 'ஈ' இறுதிச் சொற்கள்

வரும்படி + கூறினான் = வரும்படி கூறினான்
போகும்படி + சொன்னான் = போகும்படி சொன்னான்
(அப்படி, இப்படி, எப்படி என்ற சொற்கட்குப்பின் மட்டும் மிகும்)
புலி + பாய்ந்தது = புலி பாய்ந்தது
புலி + பிடித்தான் = புலி பிடித்தான்
புளி + தின்றான் = புளி தின்றான்
வழி + தேடினான் = வழி தேடினான்
பொன்னி + கணவன் = பொன்னி கணவன்
தம்பீ + போ = தம்பீ போ

'உ', 'ஊ' இறுதிச் சொற்கள்

அது + காண் = அது காண்
அது + பெரிது = அது பெரிது
இது + கொடிது = இது கொடிது
எது + சிறிது = எது சிறிது
அடு + களிறு = அடு களிறு
சுடு + சோறு = சுடு சோறு
காது + கேளாது = காது கேளாது
மாடு + சீறுது = மாடு சீறுது
உலகு + பெரிது = உலகு பெரிது
வரகு + சிறிது = வரகு சிறிது
செய்து + கொண்டான் = செய்து கொண்டான்
பெய்து + பார்த்தான் = பெய்து பார்த்தான்
அறிந்து + கொண்டான் = அறிந்து கொண்டான்
தெரிந்து + போனான் = தெரிந்து போனான்
வந்து + சொன்னான் = வந்து சொன்னான்
பங்கு + பிரித்தான் = பங்கு பிரித்தான்
பந்து + பெரிது = பந்து பெரிது
அம்பு + தொடு = அம்பு தொடு
கண்டு + சொல் = கண்டு சொல்
இரவு + கழிந்தது = இரவு கழிந்தது
உறவு + போனது = உறவு போனது

செலவு + செய்தான் = செலவு செய்தான்
வரவு + பார்த்தான் = வரவு பார்த்தான்
அறிவு + பெற்றான் = அறிவு பெற்றான்
கூப்பு + கை = கூப்பு கை
நாட்டு + புகழ் = நாட்டு புகழ்
அன்று + சொன்னான் = அன்று சொன்னான்
இன்று + கண்டான் = இன்று கண்டான்
என்று + தந்தான் = என்று தந்தான்
அவ்வளவு + காலம் = அவ்வளவு காலம்
இவ்வளவு + துணிவு = இவ்வளவு துணிவு
எவ்வளவு + பொறுப்பு = எவ்வளவு பொறுப்பு
அதிலிருந்து + பெற்றான் = அதிலிருந்து பெற்றான்
இதினின்று + செய்தான் = இதினின்று செய்தான்
அவனொடு + போனான் = அவனொடு போனான்
அவனோடு + சேர்ந்தான் = அவனோடு சேர்ந்தான்
பண்ணோடு + பாடினான் = பண்ணோடு பாடினான்
காடு + சென்றான் = காடு சென்றான்
கிணறு + மூழ்கினான் = கிணறு மூழ்கினான்

"ஐ, ஔ" இறுதிச் சொற்கள்

அத்தனை + செடி = அத்தனை செடி
இத்தனை + சிறுமை = இத்தனை சிறுமை
எத்தனை + பசு = எத்தனை பசு
பிள்ளை + தேடினது = பிள்ளை தேடினது
பறவை + கொன்றான் = பறவை கொன்றான்
ஔவை + கண் = ஔவை கண்
அதுவோ + போனது = அதுவோ போனது

'மெய்' இறுதிச் சொற்கள்

செய் + குன்றம் = செய்குன்றம்
குளிர் + காலம் = குளிர் காலம்
பயிர் + செய்தான் = பயிர் செய்தான்
நீர் + பாய்ச்சினான் = நீர்பாய்ச்சினான்
நீர் + குடித்தான் = நீர் குடித்தான்
சிறுவர் + தாய் = சிறுவர் தாய்
அவர் + தலை = அவர் தலை

7. பல்வகைச் சொற்புணர்ச்சி

உயிரீற்றுப் புணர்ச்சி

அ + உயிர் = அவ்வுயிர்
அ + வழி = அவ்வழி
அ + யானை = அவ்யானை
பல + அணி = பலவணி
பல + ஆண்டு = பல்லாண்டு
சில + ஆடு = சிலவாடு
சில + சில = சிலசில, சிலச்சில, சிற்சில
பல + பல = பலபல, பலப்பல, பற்பல
சில + கலை = சில்கலை
சில + மலை = சின்மலை
பல + படை = பல்படை
பல + நாள் = பன்னாள்
நிலா + ஒளி = நிலாவொளி
இ + எடு = இவ்வேடு
இ + மாடு = இம்மாடு
செடி + உலர்ந்தது = செடியுலர்ந்தது
உரி + உப்பு = உரிய உப்பு
நாழி + உரி = நாடுரி
கிளி + அழகு = கிளியழகு
புளி + கறி = புளியங்கறி
புளி + சோறு = புளிஞ்சோறு
புளி + தயிர் = புளிந்தயிர்
நீ + எடு = நீயெடு
அது + இயற்றியவர் = அஃதியற்றியவர்
அது + அன்றி = அஃதன்றி
இது + ஆவது = இஃதாவது
('அது', 'இது' என்ற சொற்களின்பின் உயிர் வரின் மட்டும் அஃது, இஃது என்று திரியும். 'அதுவன்றி' என்பதும், அஃது மரம்' என்பதும் தவறாகும்.)
திரு + அடி = திருவடி
பூ + எடு = பூவெடு
எ + ஆடை = எவ்வாடை
சே + அடி = சேவடி
தே + ஆலயம் = தேவாலயம்
ஒரே + இடம் = ஒரேயிடம் [ய்
நீயே + அறிவாய் = நீயேயறிவா
அவனே + ஆடினான் = அவனேயாடினான்
கை + நெகிழ = கைந்நெகிழ
கை + மாறு = கைம்மாறு [ல்
இனிமை + சொல் = இன்சொ
கருமை + குதிரை = கருங்குதிரை
செம்மை + சொல் = செஞ்சொல்
தண்மை + நீர் = தண்ணீர்
வெம்மை + நீர் = வெந்நீர்
வாழை + இலை = வாழையிலை
பனை + ஓலை = பனையோலை
ஆவிரை + வேர் = ஆவிரம்வேர்
கோ + இல் = கோயில், கோவில்
அதுவோ + இது = அஃதோவிது

மெய்யீற்றுப் புணர்ச்சி

மண் + குடம் = மட்குடம்
மண் + தாழி = மட்டாழி
கண் + நீர் = கண்ணீர்

தூண் + நெடிது = தூணெடிது
விண் + உலகு = விண்ணுலகு
விண் + நாடு = விண்ணாடு
மரம் + குறிது = மரங்குறிது
அரம் + சிறிது = அரஞ்சிறிது
மரம் + தழைக்கும் = மரந்
தழைக்கும்
மரம் + அழகிது = மரமழகிது
மரம் + வேர் = மரவேர்
சிவம் + பதவி = சிவபதவி
பரம் + நெறி = பரநெறி
தீம் + சொல் = தீஞ்சொல்
பவளம் + இதழ் = பவளவிதழ்
செய் + நன்றி = செய்ந்நன்றி
மெய் + நிகழ்ச்சி = மெய்ந்
நிகழ்ச்சி
பொய் + மை = பொய்ம்மை
மெய் + மை = மெய்ம்மை
வாணிகர் + தெரு = வாணிகத்
தெரு
வேளாளர் + வீதி = வேளாள
வீதி
வேல் + அழகு = வேலழகு
கல் + பலகை = கற்பலகை
கல் + நெஞ்சம் = கன்னெஞ்சம்
பல் + பொடி = பற்பொடி, பல்
பொடி (பலபொடி)
கல் + தூண் = கற்றூண்
கல் + மலை = கன்மலை
கால் + நான்கு = காணான்கு
வாழ் + நன் = வாணன்
மகிழ் + நன் = மகிணன்
கள் + குடம் = கட்குடம்
புள் + பறந்தது = புட்பறந்
தது
எள் + நெய் = எண்ணெய்
வெள் + நெய் = வெண்ணெய்

பனங்கள் + நன்று = பனங்க
ணன்று
ஆள் + நலம் = ஆணலம் [ன்
வேள் + யாவன் = வேளியாவ
நாள் + தோறும் = நாடோறும்
ஊர்கள் + தோறும் = ஊர்க
டோறும்
பொன் = கலம் = பொற்கலம்
பொன் + பணி = பொற்பணி
பொன் + தோடு = பொற்றோடு
பொன் + நன்று = பொன்
னன்று
பொன் + அழகு = பொன்னழ
தன் + நலம் = தன்னலம் [கு
(தம் + நலம் = தந்நலம்)
முன் + நாள் = முன்னாள்
(மூன்று + நாள் = முந்நாள்)
[மூன்று + நீர் = முந்நீர் (கடல்)]
தேன் + மொழி = தேன்
மொழி, தேமொழி [பு,
தேன் + குழம்பு = தேன் குழம்
= தேக்குழம்பு,
= தேங்குழம்பு
தன் + பகை = தற்பகை
தன் + செயல் = தற்செயல்
என் + தந்தை = என்றந்தை,
எந்தை
என் + கு = எனக்கு, எற்கு
அவன் = கு = அவனுக்கு,
அவற்கு
(அவர் + கு = அவருக்கு)
சோழன் + நாடு = சோழநாடு
சிவன் + பெருமான் = சிவ
பெருமான்
கபிலன் + பரணன் = கபில
பரணர் [ன்
வடுகன் + நாதன் = வடுகநாத

குமரன் + கோட்டம் = குமர
கோட்டம்
முருகன் + கடவுள் = முருகக்
கடவுள்
கந்தன் + வேள் = கந்தவேள்
சுப்பிரமணியன் + முதலியார்
= சுப்பிரமணிய முதலியார்
தியாகராசன் + செட்டியார் =
தியாகராசச் செட்டியார்

மென்றொடர்க் குற்றிய லுகரப் புணர்ச்சி

குரங்கு + மனம் = குரங்குமனம்
குரங்கு + குட்டி = குரங்குக்
குட்டி, குரக்குக்குட்டி
மருந்து + பை = மருத்துப்பை
சுரும்பு + நாண் = சுருப்புநாண்
கரும்பு + வில் = கருப்புவில்
அன்பு + தளை = அற்புத்தளை
என்பு + உடம்பு = எற்புடம்பு
இரும்பு + நெஞ்சம் = இருப்பு
நெஞ்சம்
கன்று + ஆ = கற்று

உயிர்த்தொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சி

முரடு + மனிதன் = முரட்டு
மனிதன்
எருது + மாடு = எருத்துமாடு
ஆறு + ஓரம் = ஆற்றோரம் [னை
களிறு + யானை = களிற்றியா
கிணறு + நீர் = கிணற்றுநீர் [ம்
சோறு + வளம் = சோற்றுவள
வயிறு + நோய் = வயிற்று
நோய்

பூ, காய், மரப்பெயர்

பூ + கொடி = பூங்கொடி
பூ + சோலை = பூஞ்சோலை
பூ + தாது = பூந்தாது
தாழை + பூ = தாழம்பூ
முல்லை + தொடை = முல்லையந்
தொடை
விள + காய் = விளங்காய்,
விளாங்காய்
மா + காய் = மாங்காய்
புளி + காய் = புளியங்காய்
தெங்கு + காய் = தேங்காய்
புன்கு + காய் = புன்கங்காய்
வேம்பு + காய் = வேப்பங்காய்
எலுமிச்சை + காய் = எலுமிச்
சங்காய்
மாதுளை + காய் = மாதுளங்கா
பனை + காய் = பனங்காய் [ய்
பனை + அட்டு = பனாட்டு
வழுதுணை + காய் = வழுதுணை
க்காய், வழுதுணங்காய்
புன்னை + மரம் = புன்னைமரம்

காலப் பெயர்

பண்டு + காலம் = பண்டைக்
காலம்
முந்து + வளம் = முந்தைவளம்
அன்று + கூலி = அற்றைக்கூலி
இன்று + நாள் = இற்றை நாள்
நேற்று + பொழுது = நேற்
றைப்பொழுது

திசைப் பெயர்

வடக்கு + கிழக்கு = வட
கிழக்கு
மேற்கு = வடமேற்கு
திசை = வட திசை

கிழக்கு + பால் = கீழ் பால்
திசை = கீழ்த் திசை
காற்று = கீழ் காற்று,
கீழ்க்காற்று
தெற்கு + கிழக்கு = தென்
கிழக்கு
மேற்கு = தென்மேற்கு
மலை = தென் மலை
மேற்கு + கடல் = மேல்கடல்
திசை மேற்றிசை,
மேலைத்திசை
குடக்கு + திசை = குடதிசை
குணக்கு + கடல் = குணகடல்

எண்ணுப் பெயர்

ஒன்று + கோடி = ஒரு கோடி
ஆயிரம் = ஓராயிரம்
(உயிர் மெய்க்குமுன் ஒரு என்றும், உயிர்க்கு முன் ஓர் என்றும் வருதல் வேண்டும்)
இரண்டு + கோடி = இருகோடி
ஆயிரம் = ஈராயிரம்
(உயிர்மெய்க்கு முன் இரு என்றும் உயிர்க்கு முன் ஈர் என்றும் வருதல் வேண்டும்)
மூன்று + ஆயிரம் = மூவாயிரம்
நீர் = முந்நீர்
நாழி = முந்நாழி
கடல் = முக்கடல்
நான்கு + ஆயிரம் = நாலாயிரம்
யானை = நால்யானை
மணி = நான்மணி
கால் = நாற்கால்

ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்
மூன்று = ஐம்மூன்று
கால் = ஐங்கால்
வட்டு = ஐவ்வட்டு
ஆறு + ஆயிரம் = ஆறாயிரம்
கால் = அறுகால்
மாடு = அறுமாடு
வீடு = அறுவீடு
ஏழு + ஆயிரம் = எழாயிரம்
கடல் = எழுகடல், எழ்
கடல்.
மாடு = எழுமாடு
வகை = எழுவகை
எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்
கடல் = எண்கடல்
வளையல் = எண்வளையல்
ஒன்பது + பத்து = தொண்
ணூறு
ஒன்பது + நூறு = தொள்ளாயி
ரம், தொளாயிரம்
ஒன்று + பத்து = ஒருபது
இரண்டு + பத்து = இருபது
மூன்று + பத்து = முப்பது
நான்கு + பத்து = நாற்பது
ஐந்து + பத்து = ஐம்பது
ஆறு + பத்து = அறுபது
ஏழு + பத்து = எழுபது
எட்டு + பத்து = எண்பது
ஒருபது + ஒன்று = ஒருபத்
தொன்று, பதினொன்று
இருபது + இரண்டு = இருபத்
திரண்டு
முப்பது + மூன்று = முப்பத்து
மூன்று
பத்து + ஒன்று = பதினொன்று
பத்து + இரண்டு = பன்னி
ரண்டு

பத்து + மூன்று = பதின்மூன்று	இரண்டு + இரண்டு = ஈரிரண்டு, இரண்டிரண்டு
பத்து + நான்கு = பதினான்கு	மூன்று + மூன்று = மும்மூன்று
ஆயிரம் = பதினாயிரம்	நான்கு + நான்கு = நந்நான்கு
கலம் = பதின்கலம் [கு	ஐந்து + ஐந்து = ஐவைந்து
மடங்கு = பதின்மடங்	ஆறு + ஆறு = அவ்வாறு
ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம்	ஏழு + ஏழு = எவ்வேழு
கலம் = ஒன்பதின்கலம்	எட்டு + எட்டு = எவ்வெட்டு
ஒன்று + ஒன்று = ஒன்றொன்று,	பத்து + பத்து = பப்பத்து
ஒவ்வொன்று,	நூறு + பத்து = நூற்றுப்பத்து
ஒரோவொன்று,	நூறு + ஆயிரம் = நூறாயிரம்

ஒருமைப் பன்மைப் பெயர்கள்

ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை
புறா	புறாக்கள்	தோப்பு	தோப்புகள்;
கிளி	கிளிகள்	(தோப்புக்கள் = தோப்பின்கள்)	
செடி	செடிகள்	கீற்று	கீற்றுக்கள்
மந்திரி	மந்திரிகள், மந்திரிமார்	தெரு	தெருக்கள்
		பூ	பூக்கள்
தோழி	தோழியர், தோழிமார்	மரம்	மரங்கள்
		பல்	பற்கள்
தேனீ	தேனீக்கள்	நாள்	நாட்கள்
உடு	உடுக்கள்	நாய்	நாய்கள்
வீடு	வீடுகள்	சுவர்	சுவர்கள்
வண்டு	வண்டுகள்	தாய்	தாயர்
பெரியது	பெரியவை, பெரியன	தந்தை	தந்தையர்
		அண்ணன்	அண்ணன்மார்
சிறியது	சிறியவை, சிறியன	நண்பன்	நண்பர்
		தோழன்	தோழர்
எழுத்து	எழுத்துக்கள்	வீட்டான், வீட்டாள்	வீட்டார்
கருத்து	கருத்துக்கள்		
முத்து	முத்துக்கள்	நல்லவன், நல்லவள்	நல்லவர்
வாக்கு	வாக்குக்கள்		
காப்பு	காப்புக்கள்	நாட்டான்	நாட்டார்

ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை
யாது	யாவை	என்	எம்
மற்றது	மற்றவை	எனக்கு	எமக்கு
அவன், அவள்	அவர்	என்னை	எம்மை
எவன், எவள்	எவர்	உன்னை	உம்மை
அது	அவை	நின்னை	நும்மை
இது	இவை	யான்	யாம்
எது	எவை	என்னால்	எம்மால்
யாது	யாவை	என்னிடம்	எம்மிடம்
தன்	தம்	பிறன், பிறள்	பிறர்
தான்	தாம்	யாவன், யாவள்	யாவர்

9, வடசொல் தமிழ்ச்சொல்லாகத் திரியும் வகை

ஜ :-

ஜநகன்	சனகன்
பங்கஜம்	பங்கயம்
ஜாதி	சாதி
ப்ரயோஜனம்	பிரயோசனம்
பூஜா	பூசை
ஜ்யோதி	சோதி
ஜ்ஞானம்	ஞானம்

ஷ :-

ஷண்முகம்	சண்முகம்
பொக்கிஷம்	பொக்கிசம்
மகிஷி	மகிசி
பாஷை	பாடை
ரிஷி	இருடி
புஷ்பம்	புட்பம்
கஷ்டம்	கட்டம்

ஸ :-

ஸபா	சபை
வாஸம்	வாசம்
உத்ஸவம்	உற்சவம்
தபஸ்	தபசு
சரஸ்வதி	சரசுவதி
ஸ்வாமி	சுவாமி, சாமி
ஸ்நேகம்	சிநேகம்
ஸ்தானம்	தானம்
ஸ்வதேசி	சுதேசி
ஸ்வர்க்கம்	சுவர்க்கம், சொர்க்கம்
புஸ்தகம்	புத்தகம்
பஸ்மம்	பற்பம்
ஸக்தி	சத்தி
ஸப்தம்	சத்தம்

ஹ :-

ஹிமாலயம்	இமாலயம்
ரோஹிணி	உரோகிணி
மஹிமை	மகிமை

க்ஷ :-

க்ஷணம்	கணம்
பக்ஷணம்	பட்சணம்
பக்ஷி	பட்சி

அக்ஷரம்	அச்சரம், அக்கரம்
க்ஷேமம்	சேமம்
லக்ஷ்மி	இலக்குமி
தீக்ஷா	தீக்கை
பிக்ஷா	பிச்சை
யந்திரம்	இயந்திரம்

யூகி	ஊகி
தர்மம்	தருமம்
கர்ணன்	கன்னன்
அல்பம்	அற்பம்
த்ராவகம்	திராவகம்
புண்யம்	புண்ணியம்
வம்சம்	வமிசம்

10. ஊர்ப்பெயர் திரியும் வகை

உறையூர்	உறந்தை
கருந்தட்டாங்குடி	கரந்தை
கரிவலம்வந்தநல்லூர்	கருவை
காஞ்சிபுரம்	காஞ்சி, கச்சி
கும்பகோணம்	குடந்தை
கைலாயம்	கைலை
கோயம்புத்தூர்	கோவை
சென்னபட்டினம்	சென்னை
சோழன் நாடு	சோணாடு

தஞ்சாவூர்	தஞ்சை
திருச்சிராப்பள்ளி	திருச்சி
திருச்செந்தூர்	செந்தில்
திருநெல்வேலி	நெல்லை
திருவாவடுதுறை	துறைசை
தொண்டைமான் நாடு	தொண்டைநாடு
நாகபட்டினம்	நாகை
புதுச்சேரி	புதுவை
பூவிருந்தவல்லி	பூந்தமல்லி
மயிலாப்பூர்	மயிலை
விருதுநகர்	விருதை

11. தன்வினை பிறவினை யாகும் வகை

தன்வினை	பிறவினை
நட	நடப்பி
தா	தருவி
புகு	புகுத்து
ஆடு	ஆட்டு
எழு	எழுப்பு
உறு	உறுத்து
ஆறு	ஆற்று
எழுது	எழுதுவி
உருகு	உருக்கு
அடங்கு	அடக்கு

தன்வினை	பிறவினை
நீந்து	நீத்து
தோன்று	தோற்று
உண்	உண்பி
காய்	காய்ச்சு
தேய்	தேய்ப்பி
அடர்	அடர்த்து
துயில்	துயிற்று
புரள்	புரட்டு
உருள்	உருட்டு
தாழ்	தாழ்த்து

12. சொற்றொடர்ப் பிழைகளும் திருத்தங்களும்

பிழை	திருத்தம்
௧. தெருவில் இரண்டு நாய்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தது.	...சண்டையிட்டுக் கொண்டிருந்தன
௨. கழுதைகள் வேகமாய் ஓடாது.	...ஓடா.
௩. இங்கே வந்தவன் அவனல்ல.	...அவனல்லன்.
௪. நான் தந்த புத்தகம் இதுவல்ல.	...இஃதன்று.
௫. அந்த மரங்கள் பார்வைக்குச் சிறியதாய் இருக்கும்.	...சிறியனவாய்...
௬. நாகநாட்டரசர் தன் குடிகளிடம் அன்பாய் இருந்தார்.	...தம் குடிகளிடம்...
௭. மாணக்கர் தான் படிப்பதற்குப் புத்தகங்களைக் கேட்டார்	...தாம் படிப்பதற்குப்...
௮. எனது மாணவனது கட்டுரைகளைத் திருத்தினேன்.	என் மாணவனுடைய கட்டுரைகளை...
௯. நாகன் தனது பையனைக் கூப்பிட்டான்.	...தன்னுடைய அல்லது தன் பையனைக்...
௧0. என் தோட்டத்தில் ஒரு மாமரமொன்று சாய்ந்தது.	...ஒரு மாமரம் அல்லது மாமரமொன்று...
௧௧. அங்கே பல அறிஞர்கள் பேசினார்கள்	அறிஞர்கள் பலர்...
௧௨. அவன் எனது புத்தகங்களை எடுத்தான்.	...என்னுடைய அல்லது என் புத்தகங்களை...
௧௩. அங்கே என் புத்தகம் உள.	...உளது அல்லது உண்டு.
௧௪. கண்ணன் கல்வி யறிவு ஒழுக்கத்திற் சிறந்தவன்.	...கல்வி யறிவு ஒழுக்கங்களிற்...
௧௫. நாகனும் நாயும் ஓடின.	...ஓடினார்கள்.

Printed at S. B. Press, for Q. H. Ms. 387. C/ 6,000. (22-8-'46)